


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம் / ஊராட்சி ஒன்றியம், சு.கீழ்நாச்சிப்பட்டு ஊராட்சி / கிராமம், சர்வே எண்: 64/5 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400

இணையதள விண்ணப்பம் எண்: N4361YFV/2024 தி.மலை

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு : 0.22.00 ஹெக்டேர் (0.54 ஏக்கர்) 23522 ச.அடி

மனைப்பிரிவின் எல்லை -

நிலையில் உள்ள சாலை -

உத்தேச மனைப்பிரிவு சாலை -

கோரிய மனைகள் : 16

ஒதுக்கிய மனைகள் : 16

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டவை ஆவண எண்: 8578/2024, நாள்:14-06-2024

1)உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு (மூலை முடுக் குடன்) : 631.98 ச.மீ -

2)பொது உபயோகம் (PUBLIC PURPOSE) ஒதுக்கிய பரப்பு : 9.08 ச.மீ (0.57%) -

3)தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு (TANGEDCO) ஒதுக்கிய பரப்பு : 8.19 ச.மீ (0.51%) -

கட்டிட வரம்பு:

9.0 மீ அகல சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்
9.0 மீ முதல் 18மீ வரை உள்ள அகல சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்.
18.0 மீ முதல் 30.5மீ வரை உள்ள அகல சாலைகளுக்கு 4.5மீ விடப்பட வேண்டும்

மூலை முடக்கு:

12.0மீ அகல சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ வரை உள்ள அகல சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

1) அரசாணை எண்: 18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1) துறை நாள்: 04.02.2019-ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019 /பிஎ2, நாள் 05.02.2020-ன் படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலை, பூங்கா, திறவிடம், உள்ளாட்சி பொது உபயோகம் மற்றும் TANGEDCO ஆகிய - ஒதுக்கீட்டினை சம்மந்தப்பட்ட துறையினரால் தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், ஊராட்சி தலைவர் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்
3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6" x 4" அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைளின் தரம் குறித்து (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தகுதிச்சான்று பெற்று உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.
8) அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி(யூடி4(1)) துறை, நாள்: 09.12.2020-ன் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020/போ/நாள்.24.12.2020 படி - சாலைகள், பொது ஒதுக்கீடு, TANGEDCO/பூங்கா பரப்பு ஆகியவை வரைபடத்தின்படி அமைக்கப்பட்டுள்ளதை உள்ளாட்சி அமைப்பு உறுதி செய்துகொள்ள வேண்டும்.
9) மனைப்பிரிவு அமையும் இடத்தினை சுற்றிலும் உள்ள இடத்திற்கு அணுகுவழி உத்தேச சாலை அமைக்கபடுவதனை எக்காரணைத்தினைக் கொண்டும் தடுத்தல் கூடாது.
10) மணைப்பிரிவு இடத்தின் ஊடே செல்லும் குறைந்தழுத்த/உயரழுத்த மின்கம்பிப் பாதையினை (LT/HT line)உத்தேச சாலையின் நேர்பாட்டிலோ அல்லது வேறு இடத்திலோ மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ம.வ/மா.ந.ஊ.உ.இ(தி.மலை)எண்: 196/2024

அளவர்/உதவிவரைவாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location:Tiruvannamalai
Date:2024.06.24 10:43:00

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Tiruvannamalai
Date:2024.07.26 11:14:22

மூ.மணிகண்டன்
வரைவாளர் நிலை-III

தோ.துரைச்சாமி
மேற்பார்வையாளர்/வ.நி-II

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவண்ணாமலை மாவட்டம்